**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.149/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 1 |
| Name | : | சரண்யா, வயது 25 |
| Father Name/Husband Name | : | சுடலைமணி |
| Village | : | புதுகிராமம் |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of July 2025.

**(A1–A3 absent. 317 Crpc petiton filed and allowed. A4, A5 present).**

<u>முதல் விசாரணை</u>

1. நான் புதுகிராமத்தில் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் இல்லாத எதிரிகளையும் எனக்கு தெரியும். 2024 ஆம் வருடம் நான் ஊருக்கு சென்றபோது எனது கணவர் பாண்டி என்பவரிடம் எனது கணவரின் passion pro இருச்சக்கர வாகனத்தை அடகு வைத்து அதற்கு ரூ. 3000 கடனாக பெற்று வந்தார். என்னிடம் வட்டியுடன் சேர்த்து பாண்டி ரூ.4000 கேட்டார். அதை நான் மாரியப்பன் என்பவரிடம் வாங்கி பாண்டியிடம் கொடுத்து விட்டேன். பாண்டி வண்டியை ஒரு மாதமாகியும் கொடுக்கவில்லை. வேலாயுதபுரத்தில் தி.மு.க படிப்பகம் அருகே பாண்டி இருந்தபோது நானும், மாரியப்பனும் சென்று பாண்டியிடம் வண்டியை எப்போது திருப்பி தருவீர்கள் என்று கேட்டேன். பாண்டி நான்கு நாட்களில் தருவதாக கூறியதால் மாரியப்பன் அவரிடம் வண்டிக்கு தான்தான் பணம் கொடுத்துவிட்டதாகவும், 4 நாட்களில் கொடுத்து விடுவதாக இழுத்து கொண்டே செல்வதால் வண்டியை கொடுக்க வேண்டும் இல்லையென்றால் வண்டிக்கு கொடுத்த பணத்தை தர வேண்டும் என்று கேட்டார். பாண்டி ஒன்றும் சொல்லாமல் சென்று விட்டார்.
2. 20.02.2024 ஆம் தேதி இரவு 08.00 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது முத்துமாரி, முனீஸ்வரி, முனீஸ்வரன், முனீஸ்வரி, முத்துமாரி ஆகியோர் வந்து என்னை தேவுடியா மகள என்று அசிங்கமாக கேட்டு அடியாளை வைத்து மிரட்டிகிறாயா என்று கேட்டனர். மாரியப்பன் யார் என்று காட்டுமாறு கேட்டதும், மாரியப்பனை அழைத்துச் சென்று காட்டிவிட்டு பேசிக் கொண்டிருந்தபோது

முத்துமாரி, க/பெ பாண்டி தேவுடியா மகளே என்று கூறிக்கொண்டு வயிற்றில் உதைத்தார். முனீஸ்வரனும், முனீஸ்வரியும் (பாண்டியின் தங்கை மகள்) ஆகியோர் என்னை அடிக்கவிடாமல் கையை பிடித்துக் கொண்டார்கள்.

3. முனீஸ்வரியும் (பாண்டியின் மகள்), முத்துமாரி (பாண்டியின் தங்கை) இருவரும் என்னை ரீப்பக் கம்பால் வலது பக்க தலையில் அடித்து காயப்படுத்தினார்கள். பக்கத்தில் நின்றுக் கொண்டிருந்த சக்தி கணேஷ், மாரியப்பன் ஆகியோர் சப்தம் போட்டு விலக்கி விட்டார்கள். சக்தி கணேஷ் எனது கணவருக்கு போன் செய்து நடந்த சம்பவத்தை சொன்னதால் எனது கணவர் வேலாயுதபுரத்திற்கு வந்துவிட்டார். வயிற்றில் உதைத்தால் வலி அதிகமாக இருந்ததால் எனது கணவருடன் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்து சேர்ந்தேன். அங்கு நான் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். சிகிச்சையில் இருந்தபோது விசாரித்த போலீசார் நடந்தவற்றிற்கு நடவடிக்கை எடுக்க புகார் வாக்குமூலம் கொடுத்தேன். (**அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

4. எதிரி தரப்பிற்கு குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை என்பதால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.